

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.9.2024) புதுதில்லியில் உள்ள தி.மு.க. அலுவலகமான அண்ணா – கலைஞர் அறிவாலயத்திற்கு நேரில் சென்று, கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.




ஆளுநர் மாளிகையில் நேற்று முன்தினம் (27.9.2024) சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட நீதியரசர் ஸ்ரீராம் கல்பாத்தி ராஜேந்திரன் அவர்களுக்கு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.




குஜராத் மாநிலம், அகமதாபாத்தில், வஃபு சட்டத்திருத்தம் குறித்து ஆலோசிக்க நடைபெற்ற வஃபு வாரிய நாடாளுமன்ற கூட்டுக்குழுக் கூட்டத்தில் மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா கலந்துகொண்டு பேசினார். இதில் மாநிலங்களவை கழக உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய பேரூர் நகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நேற்று திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் நடைபெற்றது மாநில மாணவரணி இணைச் செயலாளர் ஜெரால்டு மற்றும் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களிடம் நேர்காணல் செய்தனர். இந்நிகழ்வில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முத்துவெங்கடேஷ், வரவேற்புரை ஆற்றினார் மாநகர அமைப்பாளர் ஆசுருதீன் நன்றி கூறினார் திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவரணியைச் சார்ந்த மாவட்ட, மாநகர மாணவ மாணவிகள் 200 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, செப். 29-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கும், கழக தோழர்களுக்கும், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந் திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29,10 2024 அன்று வெளியிட உள்ளது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திலுள்ள திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி. ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும். புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும். தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற Replacement id Card) படிவம் 6லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ. ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterpertal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப் பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவ ர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்62 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

2. பெயர்களைச் சேர்க்க /நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்

4.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், துணைத் தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள். பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள். மாவட்ட, ஒன்றிய குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த பணியின் விவரத்திளை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2 க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும். இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தில் - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## கழகத்தினருக்கு – மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள்!

அரியலூர், செப். 29 -

அரியலூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளும், கழகத் தோழர்களும், உள்ளாட்சி பிரதிநிதிகளும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும், ( BLA 2) பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும், (BLC) வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுமாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும்

29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9:30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும்

01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும் புதிதாக குடி பெயர்ந்து உள்ள வாக்காளர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும் பெயர் நீக்கம் செய்த படிவம் 7, லும் வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் திருத்தம் முகவரி மாற்றம் நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id cord) படிவம் 8 லும் அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க

(NRI voters) படிவம் 6 ஏ. ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க வடிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்குwww.nvsp.in மற்றும் www.voterportol.eci.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்த வாக்காளர்கள் சேர்க்க விரும்புபவர்களுக்கும் பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்ப படிவமான படுவம் 6 ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6ன் கலம் IV ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1, வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்

29.10. 2024.

2, பெயர்களை சேர்க்க/நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை

3, சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி,ஞாயிறு நாட்கள்

4, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் அரியலூர் மாவட்ட த்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி பேரூராட்சி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள்,மற்றும் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த பணியின் விபரத்தினை மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2 க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் ( BLC) இந்த பணியினை முழுமையாக முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள

BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்திலிருந்து, உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, நீலகிரி ஹோட்டல் ரெஸ்டாரன்ட் அசோசியேஷன் (NHRA) சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயணம் மற்றும் வாகனப் பேரணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சௌந்தராஜன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ் உட்பட பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் தளி அள்ளி ஊராட்சியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளையொட்டி 71 அடி உயரகொடி கம்பத்தில் இரு வண்ணக் கொடியினை ஏற்றி சிறப்புரையாற்றி 500 பேருக்கு நலத் திட்ட உதவிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் வழங்கினார். நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ் தலைமை தாங்கினார். கிழக்கு ஒன்றிய செயலாளர் க.மகேந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.